

# முன்னாள் எம்எல்ஏ சாந்திராமு தலைமையில் கோத்தகிரியில் அண்ணா பிறந்தநாள் விழா

**கோத்தகிரி, செப். 17–**

பேறறிஞர் அண்ணாவின் 117 வது பிறந்தநாள் விழா அண்ணா திமுக சார்பில் கோத்தகிரி காமராஜர் சதுரத்தில் நடைபெற்றது.

அண்ணாவின் உருவப் படத்திற்கு மாலை அணிவித்து, மலர்தூவி மரியாதை செலுத்தி, உறுதிமொழி ஏற்கப்பட்டு பொதுமக்களுக்கு இனிப்புகள் வழங்கப்பட்டது. நிகழ்ச்சிக்கு, குன்னூர் சட்டமன்றத் தொகுதியின் முன்னாள் உறுப்பினரும் பேரவை மாவட்டச் செயலாளருமான சாந்திராமு தலைமையேற்றார்.

விழாவில், கோத்தகிரி மேற்கு ஒன்றிய செயலாளர் கம்பட்டிகுமார், கோத்தகிரி பேரூராட்சி செயலாளர் நஞ்சு எ.சுப்பிரமணி, கீழ் கோத்தகிரி ஒன்றிய செயலாளர் ஸ்டீபன், கோத்தகிரி கிழக்கு ஒன்றிய செயலாளர் தப்பக்கம்பை கிருஷ்ணன் உட்பட, மாவட்ட, ஒன்றிய, பேரூராட்சி நிர்வாகிகள், உள்ளாட்சி பிரதிநிதிகள், கிளைச் செயலாளர்கள், அண்ணா திமுக தொண்டர்கள் திரளாகக் கலந்து கொண்டனர். பேரறிஞர் அண்ணாவின் சமத்துவம், கல்வி, சமூக நீதி என்ற கொள்கைகளை தொடர்ந்து பேணி வளர்க்க வேண்டும் என நிகழ்வில் கலந்து கொண்டோர் உறுதிமொழி ஏற்றனர்.



# தருமபுரியில் பிரதமர் பிறந்த நாள் பேனர் கிழிப்பு: பாஜக போராட்டம்

**தருமபுரி, செப். 17–**

தருமபுரி பேருந்து நிலையம் அருகே பிரதமர் மோடி பிறந்தநாளுக்கு வைக்கப்பட்ட பேனரை கிழித்தவர்கள் மீது நடவடிக்கை எடுக்க வலியுறுத்தி பாஜகவினர் போராட்டத்தில் ஈடுபட்டனர். பிரதமர் நரேந்திர மோடியின் 75வது பிறந்தநாளையொட்டி, தருமபுரி அதியமான் அரசு ஆண்கள் மேல்நிலைப்பள்ளி எதிரில் உள்ள சாலை சந்திப்பில், பாஜக நகர நிர்வாகிகள் பிரதமர் நரேந்திர மோடிக்கு வாழ்த்து தெரிவித்து விளம்பர பேனர்களை வைத்திருந்தனர்.

இந்த விளம்பர பேனர்களை மர்ம நபர்கள் கிழித்துள்ளனர். இதனை அறிந்த பாஜகவினர் விளம்பர பேனர்கள் வைக்கப்பட்டுள்ள இடத்தில் திடீரென திரண்டு போராட்டத்தில் ஈடுபட்டனர்.

மக்கள் நடமாட்டம் அதிகம் உள்ள மையப்பகுதியில் வைக்கப்பட்ட விளம்பர பேனர்களை மர்ம நபர்கள் கிழித்து உள்ளனர். விளம்பர பேனர்களை கிழித்தவர்கள் மீது உடனடியாக நடவடிக்கை எடுக்க வேண்டும்.

பாஜகவின் வளர்ச்சியை பொறுத்துக் கொள்ள முடியாமல் திமுகவினர் இதுபோன்ற செயல்களில் ஈடுபட்டு வருவதாக கூறி, திமுவை கண்டித்து பாஜகவினர் முழக்கங்களை எழுப்பினர். அப்பொழுது காவல்துறையினர் போராட்டம் நடத்திய பாஜகவினருடன் பேச்சுவார்த்தை நடத்தி நடவடிக்கை எடுப்பதாக உறுதி அளித்தனர். இதனை தொடர்ந்து பாஜக நிர்வாகிகள் போராட்டதை கைவிட்டு களைந்து சென்றனர்.



# வெண்ணந்தூர் ஊராட்சி ஒன்றியத்தில் ரூ.140 கோடியில் சாலை அமைக்கும் பணி: அரசு செயலர் ககன்தீப் சிங் பார்வையிட்டார்

**நாமக்கல், செப். 17–**

நாமக்கல் மாவட்டம் வெண்ணந்தூர், ராசிபுரம் ஆகிய ஊராட்சி ஒன்றியங்களில் ரூ.139.80 கோடி மதிப்பீட்டில் நடைபெற்று வரும் பல்வேறு வளர்ச்சி திட்டப்பணிகளை, தமிழக அரசு கூடுதல் தலைமைச் செயலாளர் (ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி துறை) ககன்தீப் சிங் பேடி, கலெக்டர் துர்காமூர்த்தி தலைமையில் நேரில் பார்வையிட்டு ஆய்வு செய்தார்.

வெண்ணந்தூர் ஊராட்சி ஒன்றியத்துக்கு உட்பட்ட கீழூர் ஊராட்சியில், போதமலையை ஒட்டிய கீழூர், மேலூர், கெடமலை ஆகிய கிராமங்களில் 1,727 பழங்குடியின மக்கள் வசித்து வருகின்றனர். சாலை வசதி இல்லாததால், அப்பகுதி மக்கள் அத்தியாவசிய பொருட்களுக்காக ஆபத்தான மலைப்பாதையை பயன்படுத்தி வருகின்றனர்.

இந்த பிரச்சினையைத் தீர்க்க, முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் கடந்த ஆண்டு பிப்பரவரி 18 அன்று நபார்டு திட்டத்தின் கீழ், ரூ.139.65 கோடி மதிப்பில் 31 கி.மீ நீளத்திற்கு சாலை அமைக்கும் பணிக்கு அடிக்கல் நாட்டினார். தற்போது தடுப்பு சுவர், குழாய் பாலம், கான்கிரீட் பாலம், மண்சாலை உள்ளிட்ட பணிகள் நடைபெற்று வருகின்றன.

ஆய்வின் போது, கூடுதல் தலைமைச் செயலாளர் ககன்தீப் சிங் பேடி, அப்பகுதி மக்களுடன் கலந்துரையாடி, குடியிருப்பு விவரங்கள், சாலை பணிகள் நிலைமை ஆகியவற்றை கேட்டறிந்தார். மேலும், மலைவாழ் மக்களுக்கு வீட்டுமனைப் பட்டா, மின்சாரம், கலைஞர் கனவு இல்லம், பள்ளிகள், நியாயவிலைக்கடை, நூலகம், மகளிர் சுய உதவிக்குழு கட்டிடம், தடுப்பணை போன்ற வசதிகள் அரசு விதிமுறைகளின்படி வழங்கப்படும் என உறுதியளித்தார்.

அதேநேரம், ஆலாம்பட்டி ஊராட்சியில் முதல்வரின் வீடுகள் மறுகட்டுமான திட்டத்தின் கீழ் ரூ.2.40 லட்சம் மதிப்பில் வீடுகள் கட்டப்பட்டு வருவது, ராசிபுரம் ஒன்றிய கோனேரிபட்டி ஊராட்சியில் ரூ.6.08 லட்சம் மதிப்பில் 10,000 மரக்கன்றுகள் உற்பத்திக்கான நாற்றங்கால் அமைக்கப்பட்டிருப்பது, மண்புழு உரம் தயாரிக்கும் கொட்டகை அமைப்பு, வடுகம் ஊராட்சியில் தலா ரூ.3.50 லட்சம் மதிப்பில் 2 வீடுகள் கட்டப்பட்டிருப்பது ஆகியவற்றையும் நேரில் பார்வையிட்டார். பணிகள் அனைத்தும் விரைவாகவும் தரமாகவும் நிறைவேற்றப்பட வேண்டும் என அலுவலர்களுக்கு அவர் அறிவுறுத்தினார்.இந்த ஆய்வுகளின்போது, திட்ட இயக்குநர் (மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை) வடிவேல், திட்ட இயக்குநர் (மகளிர் திட்டம்) செல்வராசு, உதவி இயக்குநர் (ஊராட்சிகள்) பிரபாகரன் உட்பட துறைச் சார்ந்த அலுவலர்கள் உடனிருந்தனர்.



காரமடை நகர அதிமுக சார்பில் அண்ணாவின் 117வது பிறந்தநாள் விழா காரமடை கார் நிறுத்தும் பகுதியில் நடைபெற்றது. அங்கு அலங்கரித்து வைக்கப்பட்டிருந்த பேறிஞர் அண்ணாவின் உருவப்படத்திற்கு மரியாதை செய்யும் நிகழ்ச்சி நடைபெற்றது. நிகழ்ச்சிக்கு காரமடை நகர செயலாளர் டி.டி.ஆறுமுகசாமி தலைமை தாங்கினார். கோவை வடக்கு மாவட்ட செயலாளர் எம்.எல்.ஏ பி.ஆர்.ஜி.அருண்குமார், முன்னாள் எம்எல்ஏ ஓ.கே.சின்னராஜ் ஆகியோர் சிறப்பு விருந்தினராக கலந்து கொண்டு அண்ணாவின் உருவப் படத்திற்கு மலர் தூவி மரியாதை செலுத்தினர். நிகழ்ச்சியில் மாவட்ட துணைச்செயலாளர் பி.டி.கந்தசாமி, பேரவை செயலாளர் நாசர், நகரத் துணைச் செயலாளர் சுப்ரமணி, நகர் மன்ற உறுப்பினர் வனிதா சஞ்சீவ் காந்தி மற்றும் வார்டு செயலாளர்கள், மேற்கு ஒன்றிய கட்சி நிர்வாகிகள் கலந்து கொண்டனர். முடிவில் நகர பொருளாளர் விஜய் பிரபு நன்றி கூறினார்.

# நீலகிரியில் ஏற்றுமதி தொடர்பான பயிற்சி வகுப்பு: 3 நாள் நடக்கிறது

**நீலகிரி, செப். 17–**

தமிழக அரசின் தொழில் முனைவோர் மேம்பாட்டு மற்றும் புத்தாக்க நிறுவனத்தின் சார்பாக ஏற்றுமதி வாய்ப்புகள் மற்றும் நடைமுறைகளைப் பற்றிய மூன்று நாள்தொழில் முனைவோர் மேம்பாட்டு பயிற்சி செப்டம்பர் 23 மற்றும் 25 தேதிகளில் நீலகிரி மாவட்ட தொழில் மையத்தில் நடைபெற உள்ளது. இப்பயிற்சியில் ஏற்றுமதி சந்தையின் தேவை, கொள்முதலுக்கான வாய்ப்புக்கள், ஏற்றுமதி இறக்குமதி சம்பந்தப்பட்ட சட்ட திட்டங்கள், வங்கி நடைமுறைகள், அந்நிய செலாவனியின் மாற்று விகிதங்கள், காப்பீடு குறித்த தகவல்கள், ஏற்றுமதிஇறக்குமதி விதிமுறைகள் மற்றும் ஆவணங்கள் போன்றவை பயிற்றுவிக்கப்படும்.

மேலும், இப்பயிற்சியில் ஏற்றுமதியாளர்களுக்கான ஊக்க உதவிகள் பற்றியும் அவைகளை பெறும் முறைகளை பற்றியும் ஆலோசனைகளும், அரசு வழங்கும் உதவிகள் மற்றும் மானியங்கள் ஆகியவையும் பற்றியும் விளக்கப்படும்.

ஏற்றுமதி சார்ந்த தொழில் துவங்க விரும்பும் அல்லது தற்போது உற்பத்தி செய்யும் பொருட்களை ஏற்றுமதி செய்ய விரும்பும் 18 வயது நிரம்பிய 10 ம் வகுப்பு தேர்ச்சி பெற்ற அனைவரும் சேரலாம். இந்த பயிற்சியின் இறுதியில் அரசு சான்றிதழ் வழங்கப்படும். பயிற்சியில் பங்கு பெற முன்பதிவு அவசியம்.

இப்பயிற்சி பற்றிய கூடுதல் விவரங்களை பெற விரும்புவோர் www.edith.in என்ற வலைத்தளத்தில் தெரிந்து கொள்ளலாம். மேலும் விவரங்களுக்கு, நீலகிரி மாவட்ட திட்ட மேலாளரை 9080130299 என்ற தொலைபேசியில் தொடர்பு கொள்ளலாம். நீலகிரி மாவட்டத்தில் உள்ள தொழில் முனைவோர்கள் இந்த அரிய வாய்ப்பினை பயன்படுத்தி பயன் பெறுமாறு கலெக்டர் லட்சுமி பவ்யா தண்ணீரு தெரிவித்துள்ளார்.


CENTRUM Home Loans — Aao milkar ghar banaye

கார்ப்பரேட் & பதிவு அலுவலகம்: யூனிட் எண்.801, சென்ட்ரம் ஹவுஸ், சிஎஸ்டி சாலை, வித்யாநகரி மார்க், கலீனா சாந்தாகுரூஸ் (கிழக்கு), மும்பை 400 098.
CIN : U65922MH2016PLC273826

## சுவாதீன அறிவிப்பு

(உரிமை அமலாக்க விதிகள், 2002ன் விதி 8(1) மற்றும் இணைப்பு IVஇன் படி)

[சென்னை 600032, கிண்டி, மவுண்ட் ரோடு, எண்.88ல் அலுவலகம் கொண்டு செயல்படும் M/s. சென்ட்ரம் ஹவுசிங் பைனான்ஸ் லிமிடெட் (CHFL) ஆகிய நாங்கள், நேஷனல் டிரஸ்ட் ஹவுசிங் பைனான்ஸ் லிமிடெட்டின் (NATRUST) வீட்டு வசதி கடன் இலாகாவை கையப்படுத்தி உள்ளோம். இதில் ஊழியர்களும் அடங்குவர். நேஷனல் டிரஸ்ட் ஹவுசிங் பைனான்ஸ் லிமிடெட் (NATRUST) மற்றும் சென்ட்ரம் ஹவுசிங் பைனான்ஸ் லிமிடெட் (CHFL) இடையே 03.12.2022 தேதியிட்ட வணிக பரிமாற்ற ஒப்பந்தத்தின் படி, 28.02.2023 முதல் அமலுக்கு வருகிறது. மேற்கூறிய ஒப்பந்தத்தின்படி, கடன்களுக்கான அனைத்து உரிமைகள், பாத்தியதை மற்றும் வட்டி, சலுகைகள் மற்றும் கடன்கள் தொடர்பான நிதி ஆவணங்களின் கீழ் கையகப்படுத்தல் மற்றும் சலுகைகள் உட்பட எந்தவொரு தற்செயலான உரிமையும் M/s. சென்ட்ரம் ஹவுசிங் பைனான்ஸ் லிமிடெட்டிற்கு (CHFL) ஆதரவாக அவர்களின் அனைத்து பத்திரங்களுடன் கையகப்படுத்தப்பட்டு உள்ளது. மேற்கூறிய ஒப்பந்தத்தின்படி, M/s. சென்ட்ரம் ஹவுசிங் பைனான்ஸ் லிமிடெட்டிற்கு (CHFL) முழுமையான உரிமையாளராக மாறியுள்ளது, மேலும் கடன்களை அல்லது அதன் எந்தப் பகுதியையும் திருப்பிச் செலுத்துவதற்கு சட்டப்பூர்வமாக உரிமை பெற்ற ஒரே நிறுவனம் இதுவாகும், இதில் ஒரு வழக்குத் தாக்கல் செய்ய அல்லது அதன் சொந்த பெயரில் அத்தகைய பிற நடவடிக்கைகளைத் தொடங்கவும், கடன்களை மீட்டெடுப்பதற்கான நோக்கத்திற்காக ஒரு ஒதுக்கீட்டாளராகவும், M/s. நேஷனல் டிரஸ்ட் ஹவுசிங் பைனான்ஸ் லிமிடெட்டின் (NATRUST) பிரதிநிதியாகவோ அல்லது முகவராகவோ மட்டுமல்லாமல் தேவைப்படும் பிற நடவடிக்கைகளை எடுக்கவும் உரிமை உண்டு.

அதேசமயம், 2002ம் ஆண்டு கடனீட்டுச் சொத்துக்களை ரொக்கமாக்குதல் மற்றும் நிதி சொத்துக்களை சீரமைத்தல் மற்றும் கடனீட்டுச் சொத்து மீதான உரிமை அமலாக்கச் சட்டத்தின் கீழும் மற்றும் பிரிவு 13(12)ன் கீழ் அளிக்கப்பட்ட அதிகாரத்தின்படியும், 2002ம் வருடத்திய கடனீட்டுச் சொத்து மீதான உரிமை (அமலாக்க) விதிமுறைகளின் 3வது விதிமுறைக்கு இணங்க, கீழே கையொப்பமிட்டவர் சென்ட்ரம் ஹவுசிங் பைனான்ஸ் லிமிடெட்டின் அங்கீகரிக்கப்பட்ட அதிகாரி ஆவார். கீழே குறிப்பிடப்பட்டுள்ள கடன்தாரர்/உத்தரவாததாரருக்கு, நிறுவனத்தின் அங்கீகரிக்கப்பட்ட அதிகாரி கோரிக்கை அறிவிப்பு(கள்) அனுப்பி, குறிப்பிட்ட அறிவிப்பு பெறப்பட்ட நாளிலிருந்து 60 நாட்களுக்குள் அறிவிப்பில் குறிப்பிடப்பட்டுள்ள தொகையை திருப்பிச் செலுத்த வேண்டும் என கோரியிருந்தார். கடன்தாரர் தொகையைத் திருப்பிச் செலுத்தத் தவறியதால், கீழே கையொப்பமிட்டவர், மேற்கூறிய சட்டத்தின் பிரிவு 13(4) மற்றும் விதி 8ன் கீழ் அவருக்கு வழங்கப்பட்ட அதிகாரங்களைப் பயன்படுத்தி, கீழே விவரிக்கப்பட்டுள்ள சொத்தை சுவாதீனம் எடுத்துள்ளார் என்று கடன்தாரர்/ உடன் கடன்தாரர்/ உத்தரவாததாரர்/கள் மற்றும் பொதுமக்களுக்கு இதன் மூலம் அறிவிப்பு வழங்கப்படுகிறது. கடன்தாரருக்கு குறிப்பாகவும் மற்றும் பொதுமக்கள் பொதுவாகவும் தெரிவிப்பது என்னவெனில், மேற்கண்ட சொத்தை எந்தவிதத்திலும் கையாள வேண்டாம் என்று இதன் மூலம் எச்சரிக்கப்படுகிறார்கள். மேலும் சொத்துடனான எந்தவொரு பரிவர்த்தனையும் இங்கு குறிப்பிடப்பட்டுள்ள தொகைக்கு சென்ட்ரம் ஹவுசிங் பைனான்ஸ் லிமிடெட்டின் பொறுப்பிற்கு உட்பட்டது, அதற்கான வட்டியும் இதில் அடங்கும்.

ஈடுபெற்ற சொத்துக்களை மீட்டுக்கொள்ள, கிடைக்கும் நேரத்தைப் பொறுத்தவரை, சட்டத்தின் பிரிவு 13ன் துணைப் பிரிவு (8)ன் விதிகளுக்கு இணங்க கால அவகாசம் உள்ளதால் கடன்தாரர்கள் அதை மீட்டுக்கொள்ள அழைப்பு விடுக்கப்படுகிறது.

| வ. எண். | கடன்தாரர்/ உடன் கடன்தாரர்/ உத்தரவாததாரர் பெயர்/ கடன் கணக்கு எண்/கிளை | ஈடுபெற்ற ஆஸ்திகள் விவரம் (அசையா சொத்து) | கோரிக்கை அறிவிப்பு தேதி & மொத்த நிலுவைத் தொகை (ரூ.) | சுவாதீனத் தேதி |
|---|---|---|---|---|
| 1 | ஜீவானந்தம் ஆர்/ முத்து செல்வி எம் / கடன் கணக்கு எண். CJBCJ24015628 | அசையா சொத்தின் சிறு துண்டுகளும் அதன் பகுதிகளும். எஸ்.எப். எண். 842/A1, கதவு எண். 81, மொத்த பரப்பளவு 2196 சதுர அடி. அண்ணா நகர், மார்ச்சநாயக்கன் பாளையம் கிராமம், திவான்சபுதூர், மீனாட்சிபுரம், பொள்ளாச்சி ஆனைமலை தாலுகா, கோயம்புத்தூர் மாவட்டம் –642103, தமிழ்நாடு. எல்லைகள்: கிழக்கு: சாலை, மேற்கு: திரு. முத்துசாமி கவுண்டர் சொத்து, வடக்கு: உரிமையாளர் சொத்து, தெற்கு: திருமதி. குப்பத்தாள் சொத்து. | 02/04/2025 ரூ.33,69,577/- (ரூபாய் முப்பத்து மூன்று லட்சத்து அறுபத்து ஒன்பதாயிரத்து ஐந்நூற்று எழுபத்தேழு மட்டும்) | 12/09/2025 |
| 2 | லோகேஸ்வரன் வி / முத்துலட்சுமி பி / கடன் கணக்கு எண். CJBCJ24018114 | அசையா சொத்தின் உடமைகளும் உரிமைகளும் உட்பட. நத்தம் பழைய எஸ்.எப். எண்.208/1B பகுதி, புதிய நத்தம் எஸ்.எப். எண். 295/3–ல் உள்ள 1012 சதுர அடி. விஸ்தீரணம் கொண்ட நிலம், முனியப்பன் கோவில் தெரு, வரதனூர் கிராமம், நெகமம் சார் பதிவு அலுவலகம், கிணத்துக்கடவு தாலுக்கா, கோயம்புத்தூர் மாவட்டம் –642210–ல் இந்த சொத்து உள்ளது. எல்லைகள் : கிழக்கு : வடக்கு தெற்காக சந்து & எஸ். எப். எண். 295/2, மேற்கு : வடக்கு தெற்காக சந்து & எஸ்.எப். எண். 295/2, வடக்கு : கிழக்கு மேற்காக பாதை எஸ்.எப். எண். 280, தெற்கு : எஸ்.எப்.எண். 207 | 07/05/2025 ரூ.17,33,478/- (ரூபாய் பதினேழு லட்சத்து முப்பத்து மூவாயிரத்து நானூற்று எழுபத்தெட்டு மட்டும்) | 12/09/2025 |

இடம் : தமிழ்நாடு, தேதி : 17.09.2025 — ஒப்பம்/- அங்கீகரிக்கப்பட்ட அதிகாரி, சென்ட்ரம் ஹவுசிங் பைனான்ஸ் லிமிடெட்





# நவீன வசதியுடன் சிட்ரோன் பசால்ட் கார் அறிமுகம்: ஆரம்ப விலை ரூ.7.95 லட்சம்

**கோவை, செப். 17–**

சிட்ரோன் இந்தியா நிறுவனம் தனது ‘சிட்ரோன் 2.0–புதிய அனுபவத்துக்குள் நகருங்கள்’ திட்டத்தின் ஒரு பகுதியாக பசால்ட் எக்ஸ் மாடலை அறிமுகப்படுத்தியுள்ளது.

இந்த மாடலில் இந்தியாவின் முதல் இன்டெலிஜென்ட் இன் கார் காம்பானியனான காரா இணைக்கப்பட்டு உள்ளது. 52 மொழிகளில் பேசும் திறன் கொண்ட இந்த வசதி, குரல் அடிப்படையிலான எஸ்ஓஎஸ், நேவிகேஷன், வாகன கட்டுப்பாடுகள், தகவல் சேவைகள் போன்றவற்றை வழங்குகிறது.

ஸ்டெலாண்டிஸ் இந்தியா தலைமை செயல் அதிகாரி ஷைலேஷ் ஹசேலா கூறியதாவது: “காரா மற்றும் பசால்ட் எக்ஸ் இணைந்து வாடிக்கையாளர்களுக்கு தனித்துவமான பயண அனுபவத்தை வழங்கும்,” என்றார்.

பசால்ட் எக்ஸ் மாடலில் ஹலோ 360° கேமரா, வெண்டிலேட்டட் சீட்ஸ், ப்ராக்ஸிசென்ஸ் பெப்ஸ், க்ரூயிஸ் கண்ட்ரோல், எல்இடி ஹெட்லைட்ஸ் மற்றும் நவீன உள்துறை வடிவமைப்பு உள்ளிட்ட அம்சங்கள் வழங்கப்பட்டுள்ளன.

மேலும், 85% ஹை க்ரேட் ஸ்டீல், 6 ஏர்பேக்ஸ், ஈஎஸ்பி, டிபிஎம்எஸ், ஐஎஸ்ஓ பிக்ஸ் மற்றும் பெரிமெட்ரிக் அலாரம் போன்ற மேம்பட்ட பாதுகாப்பு வசதிகளும் கொண்டுள்ளது.

ஸ்டெலாண்டிஸ் வணிகத் தலைவர் குமார் பிரியேஷ் கூறியதாவது: “இந்திய சந்தைக்கேற்ப வடிவமைக்கப்பட்ட பசால்ட் எக்ஸ், தினசரி பயணத்தை பிரீமியம் அனுபவமாக மாற்றும்,” என்றார்.

பசால்ட் எக்ஸ் மாடல்கள் ரூ.7.95 லட்சம் முதல் ரூ.12.89 லட்சம் வரை அறிமுக விலையில் கிடைக்கின்றன. ஆரம்ப முன்பதிவுகளுக்கு காரா வசதி இலவசமாக வழங்கப்படும். டெலிவரி பண்டிகை காலத்தில் துவங்கும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.


TATA

## டாடா கேபிடல் லிமிடெட்

பதிவு அலுவலகம்: 11வது தளம், டவர் ஏ, பெனின்சுலா பிசினஸ் பார்க், கண்பத்ராவ்கடம் மார்க், லோயர் பரேல்,மும்பை–400 013, இந்தியா
CIN No. U65990MH1991PLC060670

(விதி – 8(6)ஐ பார்க்க)

**அசையா சொத்துக்களை விற்பனை செய்வதற்கான விற்பனை அறிவிப்பு**

**2002ம் ஆண்டு கடனீட்டுச் சொத்துக்களை ரொக்கமாக்குதல் மற்றும் நிதி சொத்துக்களை சீரமைத்தல் மற்றும் கடனீட்டுச் சொத்து மீதான உரிமை அமலாக்கச் சட்டம் மற்றும் கடனீட்டுச் சொத்து மீதான உரிமை (அமலாக்க) சட்டம் 2002ன் விதி 8(6)ன் கீழ் அசையா சொத்துக்களின் விற்பனைக்கான மின்னணு ஏல விற்பனை அறிவிப்பு**

இதன்மூலம் பொதுமக்களுக்கு பொதுவாகவும், கடன்தாரர்(கள்), உடன் கடன்தாரர்கள், அடமானதாரர்கள் மற்றும் உத்தரவாததாரர்(கள்) ஆகியோருக்கு குறிப்பாகவும் தெரிவிப்பது யாதெனில், டாடா கேபிடல் லிமிடெட் (TCL)ல் (NCLTஆல் அங்கீகரிக்கப்பட்ட சீரமைப்பு திட்டத்தின்படி டாடா கேபிடல் பைனான்சியல் சர்வீசஸ் லிமிடெட்டை மாற்றிக் கொண்ட நிறுவனம்) அடமானம் வைக்கப்பட்டுள்ள/ஈடாக வைக்கப்பட்டுள்ள கீழே விவரிக்கப்பட்டுள்ள அசையாச் சொத்து, 21.07.2025 அன்று வரையிலான கால கடன் எண்.21894287க்கான தொகை ரூ.4,98,05,458/- (ரூபாய் நான்கு கோடியே தொண்ணூற்றெட்டு லட்சத்து ஐயாயிரத்து நானூற்று ஐம்பத்தெட்டு மட்டும்) மற்றும் கால கடன் எண்.21894606க்கான தொகை ரூ.1,45,40,911/- (ரூபாய் ஒரு கோடியே நாற்பத்தைந்து லட்சத்து நாற்பத்தாயிரத்து தொள்ளாயிரத்து பதினொன்று மட்டும்) மொத்தம் ரூ.6,43,46,369/- (ரூபாய் ஆறு கோடியே நாற்பத்து மூன்று லட்சத்து நாற்பத்தாறு ஆயிரத்து முந்நூற்று அறுபத்தொன்பது மட்டும்) மற்றும் அட்டவணையில் குறிப்பிட்டுள்ள பொருந்தக்கூடிய வட்டி மற்றும் இதர கட்டணங்களை கடன்தாரர், உடன் கடன்தாரர், அடமானதாரர் மற்றும் உத்தரவாததாரரிடம் இருந்து மீட்பதற்காக கீழ் குறிப்பிட்டுள்ள அட்டவணையில் உள்ள தேதியின்படி டாடா கேபிடல் லிமிடெட்டின் (TCL) அங்கீகரிக்கப்பட்ட அதிகாரியால் SARFAESI சட்டம் பிரிவு 13(4)ன் கீழ் சுவாதீனம் எடுக்கப்பட்டது. அது ‘உள்ளது உள்ளவாறு அடிப்படையில், எப்படி உள்ளதோ அப்படியே, எந்தவித மாற்றமும் செய்யாமல்’’ **06.10.2025** அன்று விற்பனை செய்யப்பட உள்ளது.

| கடன் கணக்கு எண் | கடன்தாரர்(கள்)/ உடன் கடன்தாரர்கள்/ அடமானதாரர்கள் / உத்தரவாததாரர்(கள்) | SARFAESI சட்டம், 2002ன் பிரிவு 13 (2)ன் கீழ் கோரிக்கை அறிவிப்பு தேதி | சுவாதீனத் தேதி SARFAESI சட்டம், 2002ன் பிரிவு 13(4)ன் கீழ் அறிவிப்பு |
|---|---|---|---|
| காலக் கடன்: 21894287 | 1. M/s. லட்சுமி யார்ன் இம்பெக்ஸ் (“கடன்தாரர்”), 2. M/s. லட்சுமி யார்ன் இம்பெக்ஸ் பிரைவேட் லிமிடெட் (“உடன் கடன்தாரர்”). 3. திரு. கோபால் சர்மா (“அடமானம் அளித்தவர்”) 4. திருமதி. மங்களா சர்மா (“உத்தரவாததாரர் 1”) 5. திருமதி. சுவாதி சர்மா கோபால் சர்மா (“உத்தரவாததாரர் 2”) | கோரிக்கை அறிவிப்பு தேதி 08.04.2025 24 மார்ச் 2025 அன்றுள்ள தொகை ரூ.4,78,45,298.42/- (ரூபாய் நான்கு கோடியே எழுபத்தெட்டு லட்சத்து நாற்பத்தைந்தாயிரத்து இருநூற்று தொண்ணூற்று எட்டு மற்றும் நாற்பத்திரண்டு பைசா மட்டும்) | 10.06.2024 |
| காலக் கடன்: 21894606 | 1. M/s. லட்சுமி யார்ன் இம்பெக்ஸ் பிரைவேட் லிமிடெட் (“கடன்தாரர்”) 2. திருமதி. மங்களா சர்மா (“உத்தரவாததாரர் 1”) 3. திருமதி. சுவாதி சர்மா கோபால் சர்மா (“உத்தரவாததாரர் 2”) 4. திரு. சுனில் சர்மா (“உத்தரவாததாரர் 3”) 5. திரு. கோபால் சர்மா (‘‘அடமானம் வழங்கியவர் & உத்தரவாததாரர் 4”) | கோரிக்கை அறிவிப்பு தேதி 21.04.2025 25 மார்ச் 2025 அன்றுள்ள தொகை ரூ.1,39,66,123.86/- (ரூபாய் ஒரு கோடியே முப்பத்தொன்பது லட்சத்து அறுபத்தாறு ஆயிரத்து நூற்று இருபத்து மூன்று மற்றும் எண்பத்தாறு பைசா மட்டும்) | 23.06.2025 |

| | ரிசர்வ் விலை (ரூ.) | EMD (ரூ.) | EMD சமர்ப்பிக்க கடைசித் தேதி | மின்னணு ஏலத் தேதி |
|---|---|---|---|---|
| சொத்து 1 | 7,08,71,031 | 70,87,103 | 05.10.2025 | 06.10.2025 |
| சொத்து 2 | 3,88,77,822 | 38,87,782 | 05.10.2025 | 06.10.2025 |

விற்பனையின் விரிவான விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகளுக்கு, டாடா கேபிடல் லிமிடெட் (TCL) இணையதளத்தில், அதாவது www.tatacapital.comல் கொடுக்கப்பட்டுள்ள இணைப்பைப் பார்க்கவும்: http://bit.ly/4pl7E82. இது SARFAESI சட்டம், 2002ன் விதிகளின் விதி 9(1)ன் படி, கடன்தாரர்/ உத்தரவாததாரர்(கள்)/அடமானதாரருக்கு மேற்கூறிய தேதியில் விற்பனை நடத்துவது குறித்து தெரிவிக்கும் 15 நாட்களுக்குள் அனுப்ப வேண்டிய கட்டாய அறிவிப்பாகும்.

தேதி : 15.09.2025 — ஒப்பம்/– அங்கீகரிக்கப்பட்ட அதிகாரி
இடம் : மும்பை — டாடா கேபிடல் லிமிடட்

**அட்டவணை A**
**ஈடுபெற்ற ஆஸ்திகளின் விவரம்**
**சொத்து எண் 1**
**கீழே விவரிக்கப்பட்டுள்ள சொத்தின் சிறு துண்டுகளும் அல்லது அனைத்து பகுதிகளும்: ஆவண எண். 2305/2024ன் படி.**

| | | |
|---|---|---|
| i | சர்வே எண். | S.No. 566/1, 566/2 |
| ii | வருவாய் பதிவின்படி | S.No. 566/1, 566/2 |
| iii | மொத்த விஸ்தீரணம் | 0.40 + 0.47 (3/4) = 0.87 (3/4) ஏக்கர் |
| iv | இடத்தின் பெயர், கிராமம், நகரம், பதிவு, சார் பதிவு மாவட்டம் போன்றவை. | வேலம்பாளையம் கிராமம், திருப்பூர் வடக்கு தாலுக்கா, திருப்பூர் பதிவு மாவட்டம், திருப்பூர் இணை 2 சார் பதிவு அலுவலகம் |
| v | **i) 0.40 ஏக்கர் நிலத்திற்கான எல்லைகள்** வடக்கு : 2வது அயிட்டம் சொத்து, 0.48 ஏக்கர் நிலம், எஸ்.எப்.எண். 566/4ல் உள்ளது. இது கோபால் சர்மாவுக்குச் சொந்தமானது, தெற்கு : பொதுவான கிழக்கு மேற்காக பாதை, கிழக்கு : 30 அடி அகல தெற்கு வடக்கு பொது சாலை, மேற்கு : 2வது அயிட்டம் சொத்து, **ii) 0.47(3/4) ஏக்கர் நிலத்திற்கான எல்லைகள்** வடக்கு : எஸ்.எப்.எண். 566/5ல் உள்ள பத்மாவதி, சுரேஷ் மற்றும் புனிதவதி ஆகியோருக்குச் சொந்தமான சொத்து, தெற்கு : பொதுவான கிழக்கு மேற்காக பாதை, கிழக்கு : 1வது அயிட்டம் சொத்து, எஸ்.எப். எண். 566/4ல் உள்ள 60.48 ஏக்கர் நிலம் கோபால் சர்மாவுக்குச் சொந்தமானது, மேற்கு : கோவிலுக்கு பயன்படுத்தப்படும் பாதை, அனைத்து வசதி உரிமைகள் மற்றும் பாதையுடன் | |

**சொத்து எண் 2**
**கீழே விவரிக்கப்பட்டுள்ள சொத்தின் சிறு துண்டுகளும் அல்லது அனைத்து பகுதிகளும்: ஆவண எண். 2304/2024ன் படி.**

| | | |
|---|---|---|
| i | சர்வே எண். | S.No. 566/4 |
| ii | வருவாய் பதிவின்படி | S.No. 566/4A |
| iii | மொத்த விஸ்தீரணம் | 0.48 ஏக்கர் |
| iv | இடத்தின் பெயர், கிராமம், நகரம், பதிவு, சார் பதிவு மாவட்டம் போன்றவை. | வேலம்பாளையம் கிராமம், திருப்பூர் வடக்கு தாலுக்கா, திருப்பூர் பதிவு மாவட்டம், திருப்பூர் இணை 2 சார் பதிவு அலுவலகம் |
| v | **i) 0.47(3/4) ஏக்கர் நிலத்திற்கான எல்லைகள்** வடக்கு: எஸ்.எப்.எண். 566/5ல் உள்ள பத்மாவதி, சுரேஷ் மற்றும் புனிதவதி ஆகியோருக்குச் சொந்தமான சொத்து, தெற்கு: எஸ்.எப்.எண். 566/1ல் உள்ள 0.40 ஏக்கர் நிலம் கோபால் சர்மாவுக்குச் சொந்தமானது கிழக்கு: 30 அடி அகல தெற்கு வடக்காக பொதுச் சாலை, மேற்கு: எஸ்.எப்.எண். 566/2ல் உள்ள 0.47 (3/4) ஏக்கர் நிலம் கோபால் சர்மாவுக்குச் சொந்தமானது மற்றும் எஸ். எப்.எண். 566/5ல் உள்ள நிலம் பத்மாவதி, சுரேஷ் மற்றும் புனிதவதி ஆகியோருக்குச் சொந்தமானது, அனைத்து வசதி உரிமைகள் மற்றும் பாதையுடன் | |



## ஷிவாலிக் ஸ்மால் ஃபைனான்ஸ் பேங்க் லிமிடெட்

பதிவு அலுவலகம் : 501, சலங்கன் ஆரம், ஜசோலா மாவட்ட மையம், புதுடெல்லி –110025
CIN : U65900DL2020PLC366027

## ஏல அறிவிப்பு

வங்கியினால் வழங்கப்பட்ட தனிப்பட்ட அறிவிப்புகள் உட்பட பல்வேறு கோரிக்கைகள் மற்றும் அறிவிப்புகள் அனுப்பியபோதிலும், வங்கியிடமிருந்து பெற்ற தங்க நகை கடன்/கள் அவர்களால் சரி செய்யப்படவில்லை என்பதை ஷிவாலிக் ஸ்மால் ஃபைனான்ஸ் பேங்க் லிமிடெட்டின் கீழ்க்கண்ட கடன்தாரர்களுக்கு இதன் மூலம் தெரிவித்துக் கொள்கிறோம். வங்கியில் செக்யூரிட்டியாக வைக்கப்பட்டுள்ள தங்க நகைகளை ஏலம் விட முடிவு செய்யப்பட்டுள்ளது, அதன்படி **காலை 11:00 மணிக்கு** கடன் பெற்ற கிளை வளாகத்தில் ஏலம் விடப்படும் என்று அனைத்து கடன்தாரர்களுக்கும் இதன் மூலம் தெரிவிக்கப்படுகிறது. ஏல விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகளின்படி கடன் வாங்கியவர்கள், கணக்கு வைத்திருப்பவர்கள் மற்றும் பொதுமக்கள் உட்பட அனைவரும் இந்த ஏலத்தில் பங்கேற்கலாம்.

**ஏலத் தேதி 26.09.2025 அன்று காலை 11.00 மணி**

| வ.எண். | கிளை | கணக்கு எண் | கணக்கு வைத்திருப்பவர் பெயர் |
|---|---|---|---|
| 1 | சென்னை | 104142512082 | ரேவதி கோபாலகிருஷ்ணன் |

எந்தவொரு முன்னறிவிப்பும் இன்றி ஏலத்தில் இருந்து எந்தவொரு கணக்கையும் நீக்க அல்லது ஏலத்தை ரத்து செய்ய வங்கிக்கு உரிமை உள்ளது.

**அங்கீகரிக்கப்பட்ட அதிகாரி, ஷிவாலிக் ஸ்மால் ஃபைனான்ஸ் பேங்க் லிமிடெட்.**